செய்தி வெளியீடு எண்: 190 நாள் :12.04.2016

**தேர்தல் விதிமீறல் தொடர்பாக பெறப்பட்ட 2.91 லட்சம் புகார்களில் 2.83 லட்சம் புகார்களுக்கான விளம்பரங்கள் அழிக்கப்பட்டன. ரூ.21.85 கோடி ரொக்கம் பறிமுதல்.**

தமிழ்நாட்டில், தேர்தல் நன்னடத்தை விதிகளின்படி, 12.3.16 வரை அரசு மற்றும் பொது சொத்துகளில் சுவர் விளம்பரம் செய்ததாக 61,544 புகார்களும், போஸ்டர் ஒட்டியதாக 87,381 புகார்களும், பேனர் வைத்தாக 28,852 புகார்களும் உட்பட மொத்தம் 2,08,878 புகார்கள் பெறப்பட்டதில் 2,05,314 புகார்கள் தொடர்பான சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இதுபோல தனியார் சுவர்களில் விளம்பரம் செய்ததாக 29,588 புகார்களும், போஸ்டர் ஒட்டியதாக 37,007 புகார்களும், பேனர் வைத்தாக 5,856 புகார்கள் உட்பட மொத்தம் 82,826 புகார்களில் 77,893 புகார்களுக்கான விளம்பரங்கள் அழிக்கப்பட்டன. தேர்தல் விதிமுறைகளை மீறியதாக (MCC–1) 1277 வழக்குகளும், வாகனங்களில் அனுமதியில்லாமல் விளம்பரம் மேற்கொண்டதாக (MCC-1A) மொத்தம் 1028 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

பறக்கும் படையினர் 10.4.16 அன்று சோதனை மேற்கொண்டபோது பல்வேறு மாவட்டங்களிலிருந்து மொத்தம் ரூ.10,57,050/– ரொக்கமும் 695 சுவர் கடிகாரங்கள், 500 டீ ஷர்ட்கள், மதுவகைகள் போன்றவையும் 11.4.2016 அன்று சோதனை மேற்கொண்டபோது ரூ.1,64,420/– ரொக்கமும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் 10.4.16 அன்று சோதனைகள் மேற்கொண்டபோது ரூ.12,41,167/– ரொக்கமும், 150 அசிசி மூட்டைகளும், 11.4.16 அன்று சோதனையின் போது ரூ.3 லட்சம் மதிப்புள்ள வெள்ளி நகைகளும், 90 அரிசி மூட்டைகளும், ரூ.4.79 லட்சமும் பறிமுதல் செய்யப்பட்டன.

11.4.16 வரை நிலையான கண்காணிப்புக் குழுவினர் மூலம் ரூ.12,95,17,921/– ரொக்கமும், பறக்கும் படையினர் மூலம் ரூ.8,90,17,620/– ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9